11. அரசினர் தனித் தீர்மானங்கள்.

(அ) அம்பத்தூர் நகரியம் நகராட்சியாதல்.

எப்படியோ தவறி விட்டது. இருந்தாலும் அவர்களுக்கு வசதியாக இதனை இப்போது ஒத்தி வைத்து அடுத்த கூட்டத் தொடரில் கொண்டுவர வழிவகை செய்ய வேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்): மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துப்படி இந்தச் சட்ட மூன்வடிவு தள்ளி வைக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 50/1920) 4—பி பிரிவின் (1) உட்பிரிவிற்கிணங்க, செங்கை அண்ணா மாவட்டத்தில் தற்போதுள்ள அம்பத்தூர் நகரியம் நகராட்சியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இச் சட்டப் பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) மின்சார வாரியத்தின் கடன் ஒரு சமயத்தில் 2,400 கோடி ரூபாய் இருக்கலாமென்ற செயற்குறிப்பை ஏற்றல்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின் படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக

இரண்டாயிரத்து நானூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்.''

திரு. கோ. பூவராகவன் : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. இன்றைய தினம் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள், 2,400 கோடி ரூபாய் மின்சார வாரிய கடனாகப் பெறுவதற்கு இந்த மன்றம் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர் கோரியிருப்பது ஏற்கனவே 1,600 கோடி ரூபாயிலே இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையிலே 1,432கோடி ரூபாய் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு வழிவகைச் செய்ய வேண்டும். அதோடு மூல தனத்திலே அதிகமாக மின்சார வாரியம் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக 2,400 கோடி ரூபாய் கடன் பெறுவதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாம் அதை வழங்குவதிலே ஒன்றும் தவறில்லை. இன்னும் கொஞ்சம் அதிகமாக கூட கொடுக்கலாம். அப்போது மின்சார வாரியத்திற்கு நிறைய பொறுப்புகள் வந்து, அதிக அளவில் மின்சார நிலையங்கள் ஆங்காங்கு துவங்கப்பட வேண்டும். புதிய மின்சார உற்பத்தி நிலையங்கள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அப்படி ஏற்பாடு செய்யும்போது நிதி உதவி தாராளமாக இருப்பதற்கு அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் இருக்க வேண்டும். அதோடு பெறுகின்ற நிதியைக் கொஞ்சம் சிக்கனமாகவும், நல்லவிதமாகவும் செலவிடுவதற்கு அந்தத் துறையை முடுக்கிவிட வேண்டும். கட்டுப்பாடு செய்ய வேண்டும்.

12-10 மணி

அதிகமாக வேண்டாத பொருள்களை வாங்கிக் குவிப்பது. சமயா சமயங்களில் வாங்காமல் இருப்பது. சில சமயங்களில் மின்சார இலாக்காவிலே திருடு போவதை தடுப்பது — இதுபோன்ற விஷயங்களில் அதிகக் கவனம் காட்ட வேண்டும்.

சமீபத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விருத்தாச்சலம் நகரத்திற்கு வருகின்ற போது ஒரு வாரத்திற்கு முன்னால் அந்தப் பகுதியில் ஹை டென்ஷன் டவரில் — 4 அல்லது 5 டவரில் லாரியைக் கொண்டு போய் வைத்து பக்கத்தில் இருந்த ஆங்கில்களை எல்லாம் கழற்றி விட்டார்கள். இது ஒரு புது முறையான திருட்டு. அதுமட்டுமல்ல, நெய்வேலியை ஒட்டி இருக்கின்ற அந்தப் பகுதியில் நெய்வேலி கார்ப்பரேஷனில் பல திருட்டுகள் நடைபெறுகின்றன. அது நம்முடைய கவனத்துக்கு வராமலும்

இருக்கலாம்; தேவையும் இல்லை. அங்கு லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கேபிள்கள் திருட்டுப் போகின்றன. அவைகளை எடுத்துச் செல்பவர்கள், முன்னே கூறிய பொருட்களை எடுத்துச் சென்றவர்களாகக் கூட இருக்கலாம் என்று யூகிக்க இடம் இருக்கிறது. அங்கு பெரிய திருட்டு நடந்து இருக்கிறது. ஏதோ முதலமைச்சர் வருகையையொட்டி விரைவிலே அதை நிவர்த்தி செய்து உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு மின்சார இணைப்புத் தந்தார்கள். அந்த இலாகாவுக்கு என்னுடைய பாராட்டு. இல்லையென்றால் மாதக் கணக்கிலே அந்தப் பகுதியிலே மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருக்கும் என்பது நான் அறிந்த ஒன்று.

அடுத்து. கடலூரில் பல வருடங்களாக பேசப்பட்டு வருகின்ற ஒரு ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையம் விரைவாக கொண்டு வர வேண்டுமென்று நீண்ட நாட்களுக்கு முன்பு திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தத்திட்டம் அப்படியே நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்களையும் முதலமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்தப் பகுதியை நீங்கள் தொழில் மயமாக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்து இருக்கிறீர்கள். மின்சார உற்பத்தித் தடை இல்லாமல் இருப்பதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்; அதை விரைந்து செயல்படுத்துவதற்கு மின்சார உற்பத்தி துவங்குவதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த சமயத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திலே இன்றையதினம் இருப்பவர்கள் புதிய மின்சார நிலையத்தை ராஜஸ்தானிலே துவங்க வேண்டுமென்று அக்கறை காட்டுகிறார்களே தவிர, நம்முடைய நெய்வேலியை ஒட்டி இருக்கின்ற பகுதியில் மூன்றாவது மின்சார உற்பத்தி துவங்குவதற்கோ அல்லது நான்காவது திட்டத்தைத் துவங்குவதற்கோ அதிக அளவிலே ஏற்பாடு செய்வதாகவோ விறுவிறுப்பாக, சுறுசுறுப்பாக வேலை செய்வதாகவோ, அவர்கள் அதிலே கவனம் காட்டுவதாகவோ தெரியவில்லை. அதனாலே நம்முடைய முதலமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி விரைந்து இந்த மூன்றாவது திட்டத்தை துவங்குவதற்கும், நான்காவது திட்டத்தைத் துவங்க வைப்பதற்கும் ஏற்பாட்டினைச் செய்வதன் மூலம் அதிக அளவிலே நமக்கு மின்சார உற்பத்தி ஏற்படுவதற்கும், அதனாலே அதிக மின்சாரத்தை மக்கள் பயன்படுத்துவதற்கும், தொழில்கள் வளர்வதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று பக்கத்தில் இருக்கின்ற வளங்களை வைத்து கேஸ் டர்பைன் மூலம் புவனகிரி வட்டாரத்திலும். தஞ்சை மாவட்டத்திற்கும் இருக்கின்ற நிலையை எல்லாம் உணர்ந்து 100 மெகாவாட் மின்சார உற்பத்தி துவங்குவதற்காக என்ன ஏற்பாடு செய்து இருக்கிறார்கள்? அதனால் தொடர்ந்து ஆய்வு செய்து விரைந்து செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் எங்கு பார்த்தாலும் மிகுந்த அளவிலே மின்சாரம் வேண்டும் என்கிற வரவேற்பு அதிகமாக இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறைந்தபட்சம் 400 அடிக்கும் கீழே தான் தண்ணீர் வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கு நீர்மட்டம் கீழே போய் விட்டது. ஆனால் நம்முடைய மின்சார வாரியத்திலே ஆழ் துளைக் கிணறுகளுக்கு, பீகார் மாநிலத்தில் கொடுத்தது போல முன்னுரிமை கொடுத்து மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலே முன்னுரிமை கொடுப்பது மட்டுமல்லாமல், குறைந்த அளவில் அவர்களிடமிருந்து பணத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்வது நலமாக இருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்): அருள்கூர்ந்து ஒரு மணித்துளிக்குள் முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகவன்: அதிர்ஷ்டவசமாக தொடர்ந்து மின்சாரத் தட்டுப்பாடு இல்லாமல் சமாளித்து இருக்கிறார்கள். மேட்டூர் நீர்த் தேக்கம் அதிகமாக நிறைந்துகொண்டு இருப்பதைப் பார்க்கும்போது ஏதோ ஓரளவுக்கு அதிர்ஷ்டம் அவர்கள் பக்கம் இருக்கிறது என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். இருந்தாலும் தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம் தருவதற்கு ஒரு நிரந்தரமான அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய மின் உற்பத்தி குறையாமல் பார்த்துக்கொள்வதற்கு வெளியிலே இருந்து வருகின்ற நிலக்கரியும் சுத்தமாக, நல்ல விதமாகவும் வந்தால்தான் அதிக அளவிலே நஷ்டம் இல்லாமல் பார்த்து மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு சந்தர்ப்பம் இருக்கும். இன்றைய தினம் வருகின்ற நிலக்கரியிலே மொத்தத்தில் பார்த்தால் அதிலே அதிக அளவில் தூய்மை குறைந்து இருக்கிறது; அதனாலே நாம் மின் உற்பத்திப் பெருக்கத்தைக்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

காட்ட முடியவில்லை என்கின்ற ஒரு உணர்வு இருக்கின்றது. அதை இங்கேயிருந்து செல்பவர்கள் சரிபார்த்து நல்ல முறையிலே, நல்ல நிலக்கரியை விரைந்து பெறுவதற்கு உதவியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இந்த ஆண்டு ஒரு திட்டத்தைத் துவங்க வேண்டுமென்று சொன்னால் எந்தக் காரணத்தைக் கொண்டும் அதை தள்ளிப் போடாமல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, அந்த திட்டத்தைக் கொண்டுவருவதற்கு இந்த இலாகா முன் வர வேண்டுமென்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

12-15 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த தீர்மானத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உடன்பாடு உண்டு. அவர்கள் எல்லாம் பேசாமலே மௌனமாக இதை ஆதரித்ததற்காக நன்றி. பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பூவராகன் அவர்கள், அரிய யோசனை சொன்னதற்காக அவருக்கும் நன்றி. இது ஒன்றும் பெரிதல்ல, சாதாரணமான தீர்மானம். ரூ. 1,600 கோடி வரையில் மின்சார வாரியம் கடன் வாங்கலாம் என்று இந்த மாமன்றம் எங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது. அது போதவில்லை. திட்டங்கள் அதிகமாக இருக்கின்றன, எனவே மேற்கொண்டு இன்னும் பணம் தேவைப்படுகிறது. எனவே 2,400 கோடி ரூபாய் அளவிற்கு வாங்குவதற்கு இந்த மன்றம் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்பதுதான் இந்த தீர்மானத்தினுடைய முக்கிய நோக்கம். அதற்குக் காரணம் என்னவென்றால் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்த மாநிலத்திலே மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது. இப்போது 19 மாதங்களுக்குள்ளாக கூட கிட்டதட்ட மின் வெட்டே இல்லாத மாநிலமாக இதை மாற்றியமைத்திருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். காரணம், நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது அல்ல, 1985 ஆம் ஆண்டிலிருந்தே மின்வெட்டு இருந்தது. பல்வேறு சோதனைகளைக் கடந்து, நீங்கள் பாராட்டத்தக்க வகையிலே, இந்த மின் இலாகாவை நடத்தி வருகிறோம். ஆகவே இன்றைக்கு நடத்திவிட்டது பெரியதல்ல. வருங்காலத்திலேயும் மின்சாரப் பஞ்சம் இல்லாமல் இந்த மாநிலத்தை உருவாக்க வேண்டுமானால் நீண்டகாலத் திட்டங்கள் தேவை. அந்த திட்டங்களில் முதலமைச்சர் அவர்களுடைய பெரு முயற்சியால் உருவாக்கப்பட்டது வடசென்னை அனல் மின்

நிலையம். அதே போன்று எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தூத்துக்குடியிலே அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம்—இரண்டு யூனிட்—420 மெகாவாட்—ரூ. 606 கோடி ரூபாய். வடசென்னை அனல் மின் நிலையத் திட்டம்—630 மெகாவாட், ரூ. 720 கோடி. நரிமணத்திலே பத்து மெ.வா., ரூ. 22கோடி. பேசின் பிரிட்ஜிலே 120 மெகாவாட், ரூ. 123 கோடி. தஞ்சை மாவட்டத்திலே எரிவாயு மின் திட்டம்—300 மெகாவாட், ரூ. 330 கோடி. காற்றாலையின் மூலம் ரூ. 100 கோடி. நுண்புலம் மூலமாக வருவது ரூ. 6 கோடி என்று கிட்டதட்ட1,584 மெகாவாட் மின் உற்பத்தியைச்செய்வதற்கு வேண்டிய சாதனங்களை நிறுவ இந்த அரசு பெருமுயற்சி எடுத்திருக்கிறது. அப்படி எடுக்கிறகாரணத்தால் அவைகளுக்கெல்லாம் ஒட்டு மொத்தமாக ரூ. 3,500 கோடி நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால் நம்முடைய வருவாய் மிகக் குறைந்திருக்கிறது. ஏற்கெனவே பற்றாக்குறையால் இந்த மின் வாரியம் இருக்கிறது. அதே நேரத்தில் சமுதாய நோக்கோடு பல சலுகைகளை் விவசாயிகளுக்கு நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சிறு விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 10 ஹார்ஸ் பவர் வரையில் வைத்திருப்பவர்களுக்கெல்லாம் ரூ. 75 என்பதை ரூ. 50 ஆக மாற்றியமைத்திருக்கிறோம். இப்படி மக்களுக்கு பல்வேறு சலுகைகளை மின் வாரியம் செய்து கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே மின் வாரியத்தினுடைய செலவுகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. சாதாரணமாக சிங்கரேணியிலிருந்து கரியை வாங்க வேண்டும். ஆனால் அங்கேயிருந்து நமக்குக் கிடைக்கவில்லை என்பதால் மேற்கு வங்கத்திலோ அல்லது ஒரிசாவிலோ போய் நம் ஏற்றி வருகிறபோது ரூ. 100 கோடி நமக்கு அதிகமாக செலவாகிறது. ஆகவே எந்தச் சூழ்நிலையில் பார்த்தாலும் இன்றைக்கு மின்சார வாரியத்திற்கு பல்வேறு தடங்கல்கள், அதிகமான செலவுகள் உண்டு. இருந்தாலும் இந்த மாநிலத்தில் மின்வெட்டே இருக்கக் கூடாது என்கிற ஒரு நிலை வர வேண்டும் என்பதை முதலமைச்சர் அவர்கள் விரும்பியதால் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்துவதற்கு இந்த அரசு வேகமாகச் செயல்படுகிறது. அப்படிச் செயல்படுவதற்காக நிதி தேவைப்படுகிறது. அந்த தேவைகளுக்கேற்ப அரசு எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்தாலும், மேற்கொண்டு இருக்கின்ற பிற வாயில்களிலிருந்து, எல்.ஐ.சி.யிலோ அல்லது பவர் கார்ப்பரேஷனிலோ அல்லது மற்ற நிறுவனங்களிலிருந்தோ பணம் வாங்க வேண்டும். அவைகளுக்கு அனுமதி தாருங்கள். நீங்கள் தருகிற அனுமதியை நாங்கள் துஷ்பிரயோகம் செய்ய மாட்டோம். ரூ. 1,600 கோடி வரையில் வாங்கலாம் என்று நீங்கள் அனுமதி அளித்தாலும், ரூ. 1,600 கோடியை வாங்கி விட்டு வரவில்லை. ரூ. 1,400 கோடி வரையில்தான் வாங்கியிருக்கிறோம். இன்னும் 200 கோடி ரூபாய் இருக்கிறது. ஆகவே சிக்கனமாக அதே நேரத்தில் நிறைந்த பலனை அளிக்கக் கூடிய

வகையில் இந்த இலாகா செயல்படுகிறது. அதற்கு உங்களுடைய ஆதரவு வேண்டும் என்று கேட்டு, மன்றத்து உறுப்பினர்கள் பெருந்தன்மையோடு ஏகமனதாக இந்த தீர்மானத்தை ஆதரித்ததற்காக அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு இந்த தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக இரண்டாயிரத்து நானூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

12-20 மணி

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

(இ) இலங்கைவாழ் தமிழர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அவர்கள் நிலையான நிம்மதியான வாழ்வைப் பெறவும் அகதிகளாக வந்திருப்போர் அச்சமின்றித் திரும்பிச் செல்லவும் உரிய சூழ்நிலையை உருவாக்கிட வேண்டுமென இந்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் நாள்தோறும் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் மாண்டு கொண்டிருக்கின்றார்கள். அஃதன்னியில் விமான குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்